**ARTICLE 56 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00060**
Vol. 20, No. 01 (October 2026) – Part III | pp. 16–22
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# ஆதிச்சநல்லூர் - கீழடி பண்பாட்டுத் தளங்கள்

**தன செல்வம் பா[1,*], முனைவர்.தமிழினியன் ச[2]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம் தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை - 627002., India
[2]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை - 627002., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** தன செல்வம் பா — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தமிழகத்தின் தொன்மை வரலாற்றை அறிந்து கொள்வதற்கான முதன்மையான ஆதாரங்களில் தொல்லியல் அகழாய்வுகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற புழங்கு பொருட்கள், நாணயங்கள் போன்ற எழுத்து ஆதாரங்களுடன் ஒப்பிடும்போது, சமூகத்தின் அன்றாட வாழ்க்கை, தொழில், உணவு, குடியிருப்பு, இறப்பு மரபு, வணிகம், கைவினை, எழுத்தறிவு ஆகியவற்றை நேரடியாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன. அந்த வகையில் தமிழ்நாட்டில் மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற தொல்லியல் தளங்களான ஆதிச்சநல்லூர் மற்றும் கீழடியிலிருந்து எடுக்கப்பட்ட புழங்கு பொருட்களைச் சங்க இலக்கியத்தோடு ஒப்பிடும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords / திறவுச் சொற்கள்:** ஆதிச்சநல்லூர்; கீழடி; சங்க இலக்கியம்; முதுமக்கள் தாழி; நகரமயமாக்கம்; பண்பாடு; தொல்லியல்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** பா, த. செ., & ச, மு. (2026). ஆதிச்சநல்லூர் - கீழடி பண்பாட்டுத் தளங்கள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

தமிழகத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கான முதன்மையான ஆதாரங்களாக இலக்கியம், கல்வெட்டு, நாணயம், அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட புழங்கு பொருட்கள் ஆகியவை விளங்குகின்றன. சங்க இலக்கியம் பழந்தமிழரின் வாழ்க்கையை பல்வேறு கோணங்களில் பதிவு செய்துள்ள ஒரு முக்கியமான இலக்கியத் தொகுப்பாகும். அதேவேளையில் அகழாய்வுகள் அந்த இலக்கிய உலகின் பொருள்சார் பின்னணியை அறிய உதவுகின்றன.

இலக்கியம் என்பது பொருள்சார் அகழாய்வு அறிக்கை அல்ல. அது கவிதை, கற்பனை, குறியீடு, உவமை, வரலாற்றுச் செய்தி ஆகியவை ஒன்றோடொன்று கலந்துள்ள அறிவுத் தொகுப்பாகும். எனவே சங்க இலக்கியத்தில் காணப்படும் ஒவ்வொரு செய்திக்கும் தொல்லியல் சான்று தேடுவது மட்டும் போதுமான வரலாற்று முறையாகாது. அதற்கு மாறாக குறிப்பிட்ட இலக்கியச் செய்தியைப் புரிந்து கொள்ள தொல்லியல் பொருள் சான்றுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதைக் காண்பதே பயனுள்ள அணுகுமுறையாகும்.

இந்த அடிப்படையில் ஆதிச்சநல்லூரும் கீழடியும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆதிச்சநல்லூர் பெரும்பாலும் புதைவு மற்றும் இறப்புச் சடங்கு சார்ந்த பண்பாட்டை வெளிப்படுத்தும் தளமாக விளங்குகிறது. கீழடி வாழ்விடம், தொழில், எழுத்தறிவு, நகர அமைப்பு மற்றும் அன்றாட வாழ்க்கை ஆகியவற்றைப் புரிந்து கொள்ள உதவுகிறது.

## ஆதிச்சநல்லூர்: தொன்மையான புதைவு பண்பாட்டின் சான்று

தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுப் பகுதியுடன் தொடர்புடைய ஆதிச்சநல்லூர், தென்னிந்தியத் தொல்லியல் வரலாற்றில் நீண்டகாலமாக அறியப்பட்ட முக்கியமான தளமாகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் பெருமளவிலான முதுமக்கள் தாழிகள், அவற்றுடன் தொடர்புடைய மனித எலும்பு எச்சங்கள், இரும்புக் கருவிகள், ஆயுதங்கள், வெண்கலப் பொருட்கள், தங்கம் மற்றும் பிற அணிகலன்கள், சிறிய மட்பாண்டங்கள், மணிகள் போன்ற பொருட்கள் வெளிக்கொணரப்பட்டன.

இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை மூலம் 2004-05 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் சுமார் 600 சதுர மீட்டர் பரப்புக்குள் 178 புதைவுகள் கண்டறியப்பட்டுள்ளன. சிவப்பு மட்பாண்டங்களும் கருப்பு-சிவப்பு மட்பாண்டங்களும் பயன்படுத்தப்பட்ட தாழிப் புதைவுகள் கிடைத்தன. பல தாழிகளில் மனித எலும்புக்கூடு எச்சங்களும் கண்டறியப்பட்டதாக அதிகாரப்பூர்வ அகழாய்வு அறிக்கை குறிப்பிடுகிறது. அகழாய்வில் கிடைத்த தாழிகள் இறப்புச் சடங்கோடு தொடர்புடையவை. புதைவுகளுடன் கிடைத்த பொருட்கள் அக்கால மக்களின் தொழில்நுட்பம், உலோகப் பயன்பாடு, கைவினை மற்றும் சமூக அமைப்பைப் பற்றியும் கேள்விகளை எழுப்பும் விதமாக உள்ளன.

## சங்க இலக்கியத்தில் புதைவு மற்றும் இறப்புச் சடங்குகள்

சங்க இலக்கியத்தில் மனித வாழ்க்கையின் இறுதி நிலை குறித்த செய்திகள் பல இடங்களில் காணப்படுகின்றன. குறிப்பாகப் பாடல்களில் வீரமரணம், நடுகல், தாழி, இறப்புச் சடங்கு, புலம்பல் போன்ற செய்திகள் இடம்பெறுகின்றன.

மட்கலன்களைச் செய்யக்கூடிய வேட்கோவனே புகை வானத்தை சென்று சேரும் அளவு அகன்ற சூளையுடைய வேட்கோவனே சோழர்குலத்தின் வழி வந்தவனான நெடுமாவளவன் தேவர் உலகம் சென்று விட்டான், அவனுக்காக அகன்ற தாழியைச் செய்வாயாக, எப்படிப்பட்ட தாழி என்றால் இந்த உலகம் சக்கரமாகவும் மேரு மலையை மண்ணாகவும் கொண்டு அருங்கலம் வனைதல் வேண்டும் நீ செய்வாயா என்பதை

> “கலஞ்செய் கோவே! கலஞ்செய் கோவே!
> இருள் திணித்தன்ன குருஉத்திரன் பரு உப்புகை
> அகள் இரு விசும்பின் ஊன்றும் சூளை
> நனந்தலை முதார்க் கலம் செய் கோவே!
> ..............................................................
> மண்ணா வனைதல் ஒல்லுமோ நினைக்கே”1

எனும் பாடலடிகள் காட்டுகின்றன.

பாணர்களின் பசி தீர்த்த இளவெளிமான் இறந்த போது, பெருஞ்சித்திரனார் கையறுநிலைப் பாடல் வழி அம்மன்னனின் உடலைத் தாழியில் வைத்துப் புதைக்க அகன்ற வாய்ப்பகுதியில் கழுகும் அண்டங்காக்கையும், பேயும் இனமும் உண்ண இடுகாட்டை நோக்கிச் சென்றதாக,

“கவி செஞ்தாழிக் குவி புறத்து இருந்த
செவிசெஞ்சேவலும் கூகையும் வெருவா
வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்
பேய் ஆய்மொடு பெட்டாங்கு வழங்கும்
காடுமுன் னினனே”2

எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

புறநானூற்றில் தாழி செய்வதற்கான குயவரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இறந்தவருக்காகப் பெரிய மண்பாத்திரம் செய்யும் தொழிலாளியான குயவர் பற்றிய சங்க இலக்கியச் செய்தி, ஆதிச்சநல்லூரில் கிடைத்த பெருமளவிலான தாழிகளுடன் ஒப்பீட்டாய்வுக்கு வழிவகுக்கிறது. ஆதிச்சநல்லூரில் கிடைத்த தாழி தென்னிந்தியப் பண்பாட்டில் தாழிப் புதைவு என்ற நடைமுறை இருந்ததற்குத் தொல்லியல் ஆதாரங்கள் மிக உதவி செய்கின்றன.

## உலோகத் தொழிலும் கைவினையும்

ஆதிச்சநல்லூரில் கிடைத்த இரும்பு மற்றும் வெண்கலப் பொருட்களும் அங்கு உலோகத் தொழில்நுட்பம் வளர்ந்திருந்ததை அறிய உதவுகின்றன. இரும்புக் கருவிகள் வேளாண்மை, போரியல் அல்லது பிற தொழில்களோடு தொடர்புடையவையாக இருந்திருக்கலாம்.

சங்கப்பாடல்களில் இரும்பைப் பற்றிய பதிவுகள் நூற்று இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் உள்ளன. இப்பாடல்களில் அம்மக்களின் தொழில்நுட்ப அறிவைப் பற்றிய நேரப் பாடல்கள் எதுவும் இல்லை என்ற போதும், உவமை மற்றும் ஒப்புமை அடிப்படையில் சில பாடல்கள் இரும்பு உருவாக்கம் பற்றிய சில செய்திகளை முன்வைக்கின்றன. இதனை,

“…ஊது உலைக்குருகின் உன் உயிர்த்து அசை,
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு”3

என்ற அகப்பாடலில் இரும்பு உலையைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

ஊது உலையில் வெப்பப்படுத்தத் தோல் குழாய் இருந்ததை,
“ ஊதுஉலை
விசைவாங்கு தோலின்’
‘ஏழுர்ப் பொதுவினைக் கோருர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போல”4

என்னும் பாடலடிகள் சுட்டுகின்றன. இரும்பைச் சூடேற்றும் உலைக்கலத்தில் அதைச் சூடேற்றத் தோலாலான ஊதுஉலைக் கருவிகள் இருந்ததையும் சில பாடல்கள் பதிவு செய்துள்ளன. இதே போன்று இரும்பு ஆயுதம், வேல், வாள், கேடயம் போன்ற போரியல் பொருட்களையும், உழவு மற்றும் தொழில் சார்ந்த கருவிகளையும் பல இடங்களில் குறிப்பிடுகிறது.

## கீழடி: வாழ்விடத் தொல்லியலின் முக்கியத்துவம்

கீழடி சிவகங்கை மாவட்டத்தில், வைகை ஆற்றுத் தென்பகுதியில் மதுரையிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. வைகை ஆற்றுப் படுகையில் தொல்லியல் துறை ஆய்வு செய்து 293 இடங்களில் தொல்லியல் தளம் இருந்தது என்பதை உறுதி செய்து, குறிப்பாக 2014 ஆம் ஆண்டில் அகழாய்வுப் பணியைத் தொடங்கியது. அகழாய்வுக் குழிகளில் வளையக் கிணறுகள், விளையாட்டுப் பொருட்கள், நெசவுத்தொழிலுக்குரிய சுழல்வட்டு, மணிகள், காதணிகள், வளையல்கள், கண்ணாடி, அரிய கற்களால் செய்யப்பட்ட மணிகள், தங்கக்கம்பி, கிணறுகள் போன்ற பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. கீழடி ஒரு புதைவுத் தளமாக இல்லாமல் மக்கள் வாழ்ந்த இடத்தின் பொருட்சார் தடயங்களாகவும், திட்டமிட்ட வாழ்க்கையைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

## கீழடியும் சங்க இலக்கியமும்: நகர வாழ்க்கையின் ஒப்பீடு

கீழடி அகழாய்வின் முக்கியமான அம்சங்களில் ஒன்று கட்டட அமைப்புகளாகும். கீழடியில் கிடைத்த செங்கல் கட்டிடங்கள், வளைக்கிணறுகள், கூரை ஓடுகள் போன்றவை திட்டமிட்ட குடியிருப்பு வாழ்க்கையின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. குறிப்பாக வளையக் கிணறுகள் நீர்ப்பயன்பாடு மற்றும் நகரப்புற வாழ்வின் ஒரு முக்கிய கூறாக விளங்குகின்றன.

சங்க இலக்கியங்களில் நகரங்களின் வாழ்க்கை விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மதுரைக்காஞ்சி மதுரை நகரத்தின் அமைப்பு, சந்தைகள், மக்கள் கூட்டம், வாணிகம், அரசாட்சி, விழாக்கள் போன்றவற்றைச் சித்தரிக்கிறது.

அதேபோல் பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தின் நகர வாழ்க்கை, துறைமுகம், வாணிகம் போன்றவற்றை விரிவாக எடுத்துரைக்கிறது. இவற்றுடன் கீழடியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பழந்தமிழ் சமூகத்தில் கிராமப்புற வேளாண்மை வாழ்க்கையோடு நகரமயமான குடியிருப்புகளும் இருந்திருக்கலாம் என்பது தெளிவாகிறது. கீழடி அகழாய்வு இதற்கான பொருள்சார் சான்றுகளை வழங்குகிறது.

## கீழடியில் மட்பாண்டங்கள்

கீழடியில் பலவகையான மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. அவற்றில்: கருப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், கருப்பு மட்பாண்டங்கள், சிவப்பு மட்பாண்டங்கள், பளபளப்பான கருப்பு மட்பாண்டங்கள், உடைந்த மட்பாண்டத் துண்டுகளும் குறிப்பிடத்தக்கவை.

இந்த மட்பாண்டங்கள் அக்கால மக்களின் அன்றாடப் பயன்பட்டு பொருள் மட்டுமின்றி, தொழில்நுட்பம் மற்றும் வெளிப்புறத் தொடர்புகளையும் ஆராய்வதற்கு உதவுகின்றன. சில வகை மட்பாண்டங்களின் பரவல் உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பார்க்கும் போது, கீழடி தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்பாக இல்லாமல் பரந்த பண்பாட்டு மற்றும் வாணிக வலையமைப்பின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்ற ஆய்வுக் கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

## கீழடி மற்றும் தமிழ் பிராமி எழுத்துகள்

கீழடியின் முக்கியமான கண்டுபிடிப்புகளில் ஒன்று தமிழி அல்லது தமிழ்-பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட மட்பாண்டத் துண்டுகள் ஆகும். தமிழ்நாடு தொல்லியல் துறை வெளியிட்ட தகவலின்படி, கீழடியில் நடைபெற்ற அகழாய்வுகளில் 56 தமிழ்-பிராமி பொறித்த மட்பாண்டத் துண்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

கார்பன் மாதிரிகளின் ஆய்வின் அடிப்படையில் கீழடியின் ஒரு அடுக்கு கி.மு. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக, குறிப்பாக கி.மு. 580 எனத் தமிழ்நாடு தொல்லியல் துறை குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையில் தமிழ்-பிராமி எழுத்தின் காலத்தை முன்னைய கருத்துகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எழுத்து மட்பாண்டங்களில் உரிமையாளரின் பெயர், அடையாளம் அல்லது பொருளின் பயன்பாடு தொடர்பான தகவலைக் குறித்திருக்கலாம். இருப்பினும், ஒவ்வொரு எழுத்தையும் ஒரே பொருளில் விளக்குவது குறித்து ஆய்வாளர்களிடையே தொடர்ந்த விவாதம் உள்ளது.

## கீழடியும் உறைக்கிணறும்

கீழடியில் பல அடுக்குகள் கூடிய உறைக்கிணறுகள் கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் பட்டினப்பாலையில் இதனை,

“பறழ்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி”5

என்ற பாடல் சுட்டிக்காட்டுகின்றது.

கீழடியில் மட்டும் அல்லாது உறையூர், பூம்புகார், அரிக்கமேடு, கொற்கை போன்ற அகழாய்வுத் தளங்களில் இவை கிடைத்துள்ளது. இதன் மூலம் சங்ககால மக்கள் நீர்மேலாண்மையில் சிறந்து விளங்கியதை அறிய முடிகின்றது.

## கீழடியும் வடிகால் வசதியும்

ஓர் உயர் நாகரிகத்தின் அடையாளமாக வீட்டின் கழிவுநீர் செல்வதற்குச் சுடுமண்ணால் செய்யப்பட்ட பூமிக்கு அடியில் மறைகுழாய் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இலக்கியச் சான்றாகப் பரிபாடலில்,

“நெடு மால் உயர் மதிலில்
எதிர் ஊர் அரவத்தால்
துயில் உணர்பு எழீ,”6

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. குழாய்களில் அடைப்பு ஏற்படாமல் இருக்க வீட்டின் அருகில் சோதனை செய்யும் தொட்டியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மறைகுழாய் கீழடியில் மட்டுமல்லாது திருக்கோவிலூர், வசவசமுத்திரம், உறையூர், அரிக்கமேடு போன்ற இடங்களிலும் கண்டறியப்பட்டுள்ளது.

## கீழடியில் தொழில் மற்றும் வாணிக வாழ்க்கை முறை

கீழடியில் கிடைத்த மணிகள், கண்ணாடி மணிகள், அரிய கற்களால் செய்யப்பட்ட மணிகள், சுடுமண் பொருட்கள், உலோகப் பொருட்கள் போன்றவை பல்வேறு தொழில்கள் இருந்ததைக் காட்டுகின்றன. நூற்புத் தொழிலுடன் தொடர்புடைய சுழல் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் விளையாட்டுப் பொருட்கள், பகடைகள், காதணிகள், வளையல்கள், மணிகள் போன்றவையும் கிடைத்துள்ளன. இதற்குச் சங்க இலக்கியப் பாடல்களில் சான்றுகளும் உள்ளன. இதன் மூலம் கீழடி மக்கள் வேளாண்மையில் மட்டும் ஈடுபட்டவர்கள் அல்லர்; கைவினை, நெசவு, மணி மணி உற்பத்தி, உலோகப் பணிகள், வணிகம் போன்ற பல தொழில்களில் ஈடுபட்டிருந்திருக்கலாம் என்று பொருள்சார் சான்றுகள் தெரிவிக்கின்றன.

## கீழடி மற்றும் வைகையின் சங்க இலக்கியத் தொடர்பு

கீழடியின் மிக முக்கியமான புவியியல் பின்னணி வைகை ஆறு ஆகும். கீழடி வைகை ஆற்றுக்கு அருகில் அமைந்துள்ளது. வைகை, சங்க இலக்கியத்தில் ஒரு முக்கியமான ஆறாக இடம் பெறுகிறது. பரிபாடல் வைகை ஆற்றைப் பாடுபொருளாகக் கொண்ட பாடல்களைக் கொண்டது. வைகை என்பது வெறும் நீர்நிலை மட்டுமல்ல; மதுரையின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கையோடு இணைந்திருந்த ஆறாகச் சங்க இலக்கியத்தில் வெளிப்படுகிறது. பரிபாடலில்,

> “நனி கடல் முன்னியது போலும், தீம் நீர்
> வளி வரல் வையை வரவு”7

என்று வைகையின் நீர்வரத்து குறிப்பிடப்படுகிறது. இதுபோன்ற பாடல்கள் வைகை வெள்ளம், நீர்வளம், மக்களின் வாழ்க்கை ஆகியவற்றுக்கிடையிலான உறவை வெளிப்படுத்துகின்றன.

## மதுரைக்காஞ்சியும் வைகை நகர வாழ்க்கையும்

வைகையின் வளம் மதுரையின் பொருளாதார வாழ்க்கையுடன் இணைந்திருந்தது என்பதை மதுரைக்காஞ்சியின் பல பகுதிகள் உணர்த்துகின்றன. வைகையில் பெருநீர் பாய்ந்து வயல்களையும் மருதநிலத்தையும் வளப்படுத்துவதாகக் கூறப்படும் பகுதிகள் காணப்படுகின்றன.

கீழடியே மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப்படும் ‘மதுரை’ என்று கூறுவது சரியான அறிவியல் முடிவாகாது. ஆனால் கீழடி அமைந்துள்ள வைகைப் பள்ளத்தாக்கும் சங்க இலக்கியங்களில் புகழப்படும் மதுரை - வைகை நகரப் பண்பாடும் ஒரு பரந்த புவியியல் மற்றும் பண்பாட்டு வளையத்துக்குள் இருப்பதை மறுக்க முடியாது.

## முடிவுரை

ஆதிச்சநல்லூர் இறப்பிடப் பகுதி, கீழடி வாழ்விடப் பகுதி ஆகிய இவ்விரு பண்பாட்டுத் தலங்களின் மூலம் தமிழர்களின் தொன்மை, நாகரிகம், பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையை அறிய உதவும் முக்கியமான வரலாற்றுச் சான்றுகளாக விளங்குகின்றன. இத்தலங்களில் கிடைத்த தொல்பொருள்கள், தமிழர்கள் பழங்காலத்திலேயே சிறந்த தொழில்நுட்ப அறிவும், எழுத்தறிவும், கைவினைத்திறனும், சமூக அமைப்பும் கொண்டிருந்தனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. எனவே தமிழனின் தொன்மையான வரலாற்றையும் பண்பாட்டு மரபையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல ஆதிச்சநல்லூர், கீழடி போன்ற தொல்லியல் தலங்களையும் சங்க இலக்கியங்களையும் மீள் ஆய்வு செய்வது நம் அனைவரின் கடமையாகும்.

Vol. 20, No. 01 (October 2026) – Part III • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## அடிக்குறிப்புகள் (Notes)

1. புலியூர்க்கேசிகன் உரை, புறநானூறு, பா. எண்: 228.
2. மேலது, பா. எண்: 238.
3. புலியூர்க்கேசிகன் உரை, அகநானூறு,பா.எண்:55
4. புலியூர்க்கேசிகன் உரை, அகநானூறு, பா. எண்: 96.
5. புலியூர்க்கேசிகன் உரை, குறுந்தொகை, பா. எண்: 172.
6. புலியூர்க்கேசிகன் உரை, பட்டினப்பாலை, பா. எண்: 75 முதல் 76 வரை.
7. புலியூர்க்கேசிகன் உரை, பரிபாடல், பா. எண்: 20.

## துணைநூற் பட்டியல் (References)

1. தொல்லியல்துறை, தமிழ்நாடு அரசு.
2. தொல்லியல் நோக்கில் சங்ககாலம் - முனைவர் கா. ராஜன்.
3. ஆதிச்சநல்லூர், கீழடி அகழாய்வுகள் - கோ. உத்திராடம்.
4. இலக்கிய இனவரைவியல் - முனைவர் ஞா. ஸ்டீபன்.
5. ஆதிச்சநல்லூர் முதல் கீழடி வரை - நிவேதிதா லூயிஸ்.
6. வைகை நதி நாகரிகம் - சு. வெங்கடேசன்.

© 2026 தன செல்வம் பா, முனைவர்.தமிழினியன் ச. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..